1967 ஜூலை 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நண்பர் கூறுகிற முறையில் தான் ஏழை விவசாயிகளிடம் இருந்து நெல்லைப் பறிக்கிற போது பணத்தைக் கொடுத்துவிட்டு தானியத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆனால், இப்படிக் கடத்துவதையே ஒரு வியாபாரமாகச் செய்கிறவர்கள்மீது, கள்ளச் சந்தையாகச் செய்கிறவர்கள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. வாபஸ் பெறுவதற்குத் தயாராய் இல்லை. நமது முயற்சிகளுக்கே அது குந்தகம் ஏற்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவுதானியக் கொள்முதல், பங்கீடு, குறித்து இன்று பேரவையில் விவாதம் நடக்க இருப்பதனால், இனி இவ்வினாவில் மேற்கொண்டு துணைவினாக்கள் போடுவதை நிறுத்தலாம் என்று நினைக்கிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் 35 நிமிடங்களாகக் கேள்விபோட அனுமதி கேட்டுக்கொண்டிருந்தும் வயது வந்தவர்களுக்கே வாய்ப்புக்கொடுத்து, எனக்குக் கொடுக்காது விட்டது, என்னைப் போன்ற இளைஞர்களுடைய ஊக்கத்தைக் குறைக்காதா என்று கேட்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. It is an insult to the people who have already been given chances to say that only older people are given chances. Will the Member be good enough to withdraw that allegation?

MR. SPEAKER : For the information of the hon. Member Mr. Soundarapandian, I wish to draw attention to Rule 38 (2) of the Assembly Rules under which the Speaker may disallow any supplementary question, if a sufficient or reasonable number of supplementary questions have already been put in respect of the same question. நம்முடைய சட்டப்பேரவை விதி 38-ல் இதுபற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு போதுமான அளவுக்கு துணைக்கேள்விகள் போடுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன். திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் உணவு விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பு இருக்கிறது.

நெல் மூட்டைகளின் எடை

* 259 வினு.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல் மூட்டை எடையை நிர்ணயிப்பதில் தஞ்சையில் மூட்டைக்கு 57 கிலோ என்றும், தென்னார்க்காடு மாவட்டத்தில் 51 கிலோ என்றும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 65 கிலோ என்றும் வழக்கத்தில் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் காரணமென்ன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) It is a fact that different weights are being adopted for a bag of paddy according to local custom. In the districts of South Arcot, North Arcot, Chingleput and Salem, the weight for one bag of paddy is being adopted as 75 Kgs. In Thanjavur, Tiruchirappalli, Ramanathapuram and Kanyakumari districts, is is being adopted as 57 Kgs. In Trunelveli district, it is being adopted as 65 Kgs. In Madurai district, it is being adopted as 65 Kgs. in a few places and as 57 Kgs. in most of the areas.

(b) The Government have not prescribed the size of a bag for any district. The adoption of weight for a bag of paddy depends upon the size of the bag according to local custom. It does not affect payment of value for procurement as it is paid only in the basis of weight of the quantities handed over to the Civil Supplies Department.

உருளைக் கிழங்கு

*260 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தி எவ்வளவு?

(இ) வெளி நாடுகளுக்கும், வெளி ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறதா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் மேஜையின் மேல் வைத்திருக்கக் கூடிய இந்த விவர அறிக்கையைப் பார்த்தால், 1957-58 லிருந்து 1965-66 வரையிலே ஆரம்பத்திலிருந்து உற்பத்தியைவிட மிகவும் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? மேலும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதற்கு ஊக்கம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உருளைக் கிழங்கு உற்பத்திக் குறைவுக்கான காரணங்களை கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனுடைய உற்பத்தி லேட்பிளைட் என்ற வியாதியால் பாதிக்கப்பட்டது, அதனால் குறைந்துவிட்டது.

*261 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் வெளி நாடுகளிலிருந்து உருளைக் கிழங்கு விதை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? எந்தெந்த நாடுகளிலிருந்து, எவ்வளவு ?